# கோவிட் (COVID-19) தொற்று பரவாமல் சமாளிக்கும் விதமாக ப்ராம்ப்ட்டன் பேருந்துப் போக்குவரத்து சேவைகளில் மாற்றங்கள்

ப்ராம்ப்ட்டன், ON (மார்ச் 19, 2020) – கோவிட்-19 (COVID-19) தொற்று பரவாமல் சமாளிக்கவும் சமுதாயத்தினருக்கு ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து பாதுகாப்பானதாக இருக்கும் பொருட்டும், மார்ச் 23 ஆம் தேதி முதல் பேருந்து சேவைகள் பின் வருமாறு குறைக்கப்படும் :

**திங்கள் முதல் வெள்ளி வரை**: அதிகரிக்கப்பட்ட சேவை – சில வழித்தடங்களில் கூடுதல் பேருந்து சேவைகள் மற்றும் சில வழித்தடங்களில் அதிகாலை சேவைகள்
**சனிக்கிழமை**: வழக்கப்படியான சனிக்கிழமை சேவை
**ஞாயிற்றுக்கிழமை**: வழக்கப்படியான ஞாயிற்றுக்கிழமை சேவை

அதிகரிக்கப்பட்ட சனிக்கிழமை சேவைகள் பற்றிய அறிவிப்பு மார்ச் 20, வெள்ளிக்கிழமை மாலை 4:30 மணிக்கு bramptontransit.com இல் வெளியிடப்படும்.

ப்ராம்ப்ட்டன் போக்குவரத்து பேருந்து முனையங்கள் மற்றும் அவற்றின் தொடர்புக்கான மையமானது வழக்கப்படியான நேரங்களில் இயங்கும். இயக்க செயல்பாட்டில் ஏதேனும் மாற்றம் பற்றி bramptontransit.com இல் தகவல் தெரிவிக்கப்படும் .

ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து என்பது சிக்கலான முக்கியமான சேவையாகும் மற்றும் இது சமுதாய மக்களுக்கு சேவையாற்ற கடமைப்பட்டிருக்கிறது. வாடிக்கையாளர்களுக்கு இதற்காக அளிக்கும் ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவிக்கப்படுகிறது.

சமுதாயத்தின் ஊடாக கோவிட் - 19 (COVID-19) தொற்று பரவலைத் தடுப்பதற்காக , ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து சேவையில் பின்வரும் மாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்படும்:

- பேருந்துகளில் உள்ளபடியான இருக்கைகளின் எண்ணிக்கையில் பாதியளவுக்கே பயணிகள் ஏற்றப்படுவர்; இது சமூகத்தினர் ஒருவருக்கு ஒருவர் எட்ட இருந்து பயணிப்பதற்கேயாகும். அதாவது, பேருந்துகளில் பாதியளவு எண்ணிக்கையிலான பயணியர் ஏறிய பின்னர் அடுத்து வரும் நிறுத்தங்களில் பேருந்து நிற்காது சென்றுவிடும். பயணிகள் ஏற்றப்படமாட்டார்கள். பேருந்து நிறுத்தங்களில் காத்திருக்கும் மீதிப் பயணியரை ஏற்றிச் செல்ல, மேலும் பேருந்துகளை அனுப்பிவைக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

- அதிக கூட்டம் இருக்கின்ற வழித்தடங்களில்  ஆர்ட்டிகுலேட்டட் (நீளமான தொடர் வண்டி போன்ற) பேருந்துகள் இயக்கப்பட்டு இதன் மூலம் பேருந்தில் இருக்கும் பயணியர் ஒருவருக்கு ஒருவர் எட்ட இருந்து பயணிக்க வசதி செய்யப்படும். அதாவது, இந்த ஆர்ட்டிகுலேட்டட் (நீளமான தொடர் வண்டி போன்ற) பேருந்துகள் வழக்கமான வழித்தடங்களில் இருக்கும். பேருந்து சென்று சேருமிடங்கள் பற்றிய அறிவிப்புப் பலகைகளை கவனித்து அவற்றைஉபயோகிக்கவும்.
- பேருந்தில் இருக்கும் பயணியர் ஒவ்வொருவருக்கும், மற்றும் பேருந்து ஊழியர்களுக்கும் மற்றவர்களுக்கும்  இடையில் போதிய தூரம் இருப்பதை உறுதி செய்ய, சில இருக்கைகளின் குறுக்காக மஞ்சள் நிற நாடா கட்டப்பட்டிருக்கும்; இந்த இருக்கைகளில் பயணியர் உட்காரவேண்டாம் என கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேம்படுத்தப்பட்ட கால அட்டவணைப்படி பேருந்துகளைத்  தூய்மைப்படுத்தி அவற்றில் கிருமிநாசினி தெளிக்கும் வேலை மேற்கொள்ளப்படும்.  ஒவ்வொரு 48 மணிக்கொரு முறை பேருந்துகளின் அனைத்து பரப்புகள், இயக்குபவர் அமருமிடம் மற்றும் அனைத்து இருக்கைகளையும் கிருமிநாசினி தெளித்து சுகாதாரமாக வைப்பதே  ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து சேவையின் இலக்காகும். பேருந்து முனையங்கள் மற்றும் நிறுத்தங்களில் உள்ள மேற்பரப்புகளும்கூட தினசரி அடிப்படையில் தூய்மைப்படுத்தி கிருமிநாசினி தெளித்து சுகாதாரமாக வைக்கப்படும். பேருந்து பயணியர் தங்கள் கைவசம் தமது உபயோகத்திற்காக இதுபோன்ற  கிருமி நாசினி, கைகளைக் கழுவும் சுகாதார பொருட்களை வைத்திருந்து தங்கள் கைகளை அடிக்கடி கழுவி சுத்தமாக வைத்திருக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஆபத்துக்களைக் கண்காணிப்பதற்காக, பீல் பப்ளிக் ஹெல்த் (Peel Public Health) மற்றும் ப்ராம்ப்ட்டன் நகர அவசரகால நடவடிக்கைகளுக்கான அலுவலகம் (Brampton Emergency Measures Office) ஆகியோருடன் சேர்ந்து ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் நெருக்கமாக பணியாற்றி வருகிறது. வாடிக்கையான புது தகவல்களுக்காக வருகை புரியவும்: www.brampton.ca/covid19 மற்றும் சேவை பற்றிய புதுத் தகவல்களுக்கு வருகை புரியவும்: bramptontransit.com அல்லது  @bramptontransit  ஐ ட்விட்டரில் பின்பற்றவும்.

-30-

-30-

கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது. நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான  ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும்  Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள்.   www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca